**கற்பிட்டி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கற்பிட்டி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கற்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள ரூபா 106,000 பெறுமதியான கைதவிர்ப்புச் செய்வதற்கு பிரேரிக்கப்பட்ட ஒரு தண்ணீர் பவுசர் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2021 கணக்குகளில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கில் குறிப்பிட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 82,176 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகளை நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கும் போது சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள ரூபா 6,375,200 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்க வில்லை. | இணங்குகின்றேன். 2021 கணக்குகளைத் தயாரிக்கும் போது கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காணிகளை துண்டு போட்டு விற்பனை செய்யும் போது சபையினால் அறவிடப்பட்டிருந்த 1 சதவீத வரியான ரூபா 1,028,100 தொகை வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்கான வருமானத்தை சரியாக இனங்காண்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் படியான மீதிகளுக்கும் துணை அறிக்கைகளின் படியான மீதிகளுக்குமிடையே 03 விடயங்கள் தொடர்பாக ரூபா 14,231 மொத்த தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 789,395,235 மொத்த தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்தியாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | உறுதி மாற்றல் பத்திரம் மீதிகளின் உறுதிப்படுத்தல் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தி எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2004/10/11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 7,028,139 ஆக இருந்ததுடன் | எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கடன் பணத்தைப் பெற்றுக் கொண்டு தற்பொழுது மரணமடைந்துள்ள | அறவிட வேண்டிய கடனை விரைவாக அறவீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| அதில் ஓய்வு பெற்ற, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 54 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 119,763 கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நபர்கள் பெற்றுக் கொண்ட கடன் பணத்திற்கு எதுவித பிணை அறிக்கையும் இல்லாததன் அடிப்படையில் அறவீடு செய்தல் சிக்கலானதாக உள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 14,755,273 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 26,362,687 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 11,851,320 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தில் 50 சதவீதத்தினை இந்த ஆண்டிற்குள் அறவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை வரியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கல்பிட்டி நகர எல்லைக்குள் மாத்திரம் பிரதேச சபை வீத வரியினை அறவிடுவதுடன் ஏனைய முன்னேற்றமடைந்த நகரங்கள் மற்றும் பிரதான வீதிகளின் இரு பக்கங்களிலுமுள்ள ஆதனங்களை மதிப்பீடு செய்து வீத வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிடிருக்கவில்லை. | புதிய 06 வீதவரிப் பிரிவுகள் GPS தொழில்நுட்பத்தின் மூலம் படம் வரையப்பட்டு தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் முடிவடைந்துள்ளதுடன் வர்த்தமானியில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முன்னேற்ற மடைந்த நகரங்கள் மற்றும் பிரதான வீதிகளின் இருப் பக்கங்களிலு முள்ள ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வர்த்தமானியில் அறிவித்ததன் பின்னர் வீத வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) ஏக்கர வரி

-------------------

| | | |
|---|---|---|
| ஆய்வினை மேற்கொண்டு ஏக்கர் வரியினை அறவீடு செய்ய வேண்டிய காணிகள் இனங்காணப்பட்டிருக்காத துடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவையான ரூபா 945,585 தொகையை அறவீடு செய்வதற்கும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரி இறுப்பாளர்களை இனங்கண்டு நிலுவை வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக நிலுவை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) நீர் வரி

------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான நீர் வரி ரூபா 393,584 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரிப் பணத்தை செலுத்துமாறு தெரிவித்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பகுதி பகுதியாக வரி அறவிடப்பட்டு வருகின்றது என தெரிவிக்கின்றேன். | நிலுவை வரியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) வாடகை

--------------

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,218,776 தொகையான கடை வாடகை நிலுவைகள் காணப்பட்டதுடன் 134 கடைகளின் உடன்படிக்கை காலத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவைப் வரி செலுத்த வேண்டிய நபர்கள் தொடர்பான விபரத்தை தேடிக் கண்டுபிடித்தல் சிக்கலானதாக உள்ளது. ஏனைய கடைகள் சம்பந்தமான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக ஞாபகமூட்டல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவையான குத்தகை வாடகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இறைச்சிக் கடை மற்றும் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அறவிட வேண்டிய ரூபா 4,617,535 தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது கொடுப்பனவு செய்யத் தவறிய நபர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை வருமான பரீட்சகர்களினூடாக உரிய அறிக்கையை சேகரித்து அடுத்துவரும் பொதுச் சபைக்கு அனுப்பி வைத்து பதிவழித்தல் தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட வாடகையை ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் கள் மற்றும் வாடகை செலுத்தாத நபர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உத்தரவுப் பத்திரக் கட்டணம்<br>-----------------------------------------------<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றுலா சபையில் பதிவு செய்த ஹோட்டல்களிலிருந்து முன்னைய ஆண்டிற்கான வருமானத்தின் அடிப்படையில் 01 சதவீத கட்டணமாக ரூபா 847,918 அறவீடு செய்யப்பட்டிருந்தும் அந்த அறவீடுகள் கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையில் உறுதிப்படுத்திய உள்ளபடியான வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கணக்கு அறிக்கையைப் பெற்றதன் பின்னர் இந்த ஹோட்டல்களிலிருந்து கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்வு செய்த அறிக்கையின் அடிப்படையில் உறுதிப்படுத்திய உள்ளபடியான வருமானத்தின் அடிப்படையில் உத்தரவுப் பத்திர கட்டணங்கள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 29 காட்சிப்படுத்தல் வேலைகளின் மூலம் பிரதேச சபையினால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 70,250 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. | கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தக்குளி வடக்கு விளையாட்டு மண்டபத்தை நிர்மாணிக்கும் போது முறயாக அறவீடு செய்யப்படாததன் | மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தை நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து கழித்து கொடுப்பனவு செய்வதற்கு | பொறுப்பின்றி நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர் கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 59,848 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றேன். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கொரோனா தொற்று நோய் கற்பிட்டி தீபகற்பத்தில் பரவுவதனைத் தடுப்பதற்காக கிருமி நாசினிகளை தெளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது அங்கீகரித்த படிவங்களைப் பயன்படுத்தாது கல்பிட்டி தீபகற்பத்திற்கு வருகின்ற வாகனங்களுக்கு கிருமி நாசினிகள் தெளித்து ரூபா 100 வீதம் ரூபா 967,800 அறவீடு செய்து சபையின் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | அதிக வாகன நெருசலினால் 4 பிரதிகளைக் கொண்ட பி.ச I விலைப்பட்டியல் காபன் தாள்கள் பயன்படுத்தப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுதல் நடைமுறையில் சிக்கலானதால் ரோனியோ தாள்களில் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் வழங்குதல் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | பணத்தை அறவிடும் போது சபையின் சாதாரண பற்றுச்சீட்டுக்கள் பயன்படுத்த வேண்டியதுடன் காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வளங்கள் சபையிடம் காணப்பட்டிருந்தும் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 3,244,255 பெறுமதியான அபிவிருத்திச் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்று நோயின் காரணமாக அமுல்படுத்துவதற்கான தடைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிராமிய சங்கங்களின் மூலம் உரிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். | சபைக்கு சாதனமான முறையில் நிதியைப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட 464 கொடி கம்பங்களில் ரூபா 280,594 பெறுமதியான 219 கொடி கம்பங்கள் தொடர்பான தகவல்கள் பிரதேச சபையிடம் இல்லாததுடன் அது சம்பந்தமாக மீளாய்வுச் சபையினை நியமிப்பதற்கேனும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போன கொடி கம்பங்களின் பெறுமதியும் 25 சதவீத அரசாங்க கட்டணத்தையும் உள்ளடக்கி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கின்றேன். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |